வேண்டுமென்ற நோக்கத்தோடு, எஸ்.எம்.ஐ.பி. என்கின்ற தனி சிறப்புப் பாசனத் திட்டத்தின்கீழ் அதிகமான குளங்களை, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பாடு செய்கிறோம். மழை நீரின் மூலம் கிடைக்கிற தண்ணீரை வீணாக்காமல், பாசன வசதிக்கு உறுதுணையாக இருப்பதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 558-ம், 559-ம் மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வேதாரண்யம் பகுதியில் உரத் தொழிற்சாலை.

*வினா எண் 560—திரு மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் ரூ. 100 கோடி திட்டத்தில் உரத் தொழில் ஆரம்பிக்க ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

தென் மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு.

*வினா எண். 561 :—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 16—7—1978-ம் தேதி தென் மாநில முதலமைச்சர்களின் மாநாடு சென்னையில் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் நகல் ஒன்று* அவையில் வைக்கப்பட்டுள்ளது.

[* 797–798 ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.]